IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, NAMAKKAL

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

CCNo. 453/2015 Dep.of - PW. 1

Name : .சையது முகமது அபுதாகீர் Caste :

Fathers Name : Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873.

Chief Examination : Date :25.11.2019

நான் தற்போது தராபுரத்தில் குடியிருந்து ½ட்ின் அக்ரோ புரோடக்ட் பழனி கிளை நிறுவனத்தில் பொது மேலாளராக பணிரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் அமர்நாத். எதிரி நாமக்கல் ½ட்சன் அக்ரோ புரோடக்ட் நிறுவனத்தில் அனிமல் பீல்டு டிவிசனில் தலைவராக பணிபுரிந்தார். நான் அப்போது டி.ஜி.எம் ஆக பணிபுரிந்து வந்தேன். நான் தான் இந்த வழக்கில் புகார் அளித்தேன். நான் 3.6.2016ம் தேதி டி.ஜி.எம் ஆக நாமக்கல் கிளையில் பணி ஏற்றுக்கொண்டேன். அப்போது எங்கள் கிளையில் டெபுடி மேனேஜராக பணியில் இருந்த ராஜசேகர் என்பவர் நதீஷ்ா என்ற டிரேன்1ஸபோர்ட் கான்ட்ராக்டிற்கு வாடகை முன்தொகை ரூ.8லட்சம் கொடுக்க வேண்டும் என தெரிவித்தார். அதற்கு நான் என்ன ஆவணங்களின்படி அவருக்கு கொடுக்க வேண்டும் என கேட்டேன். கான்ட்ராக்டர் மின் அஞ்சல் கொடுப்பார் அதை வைத்து பில் அனுப்புவோம் என சொன்னார். நான் மின் அஞ்சலை அனுப்ப சொல்லுங்கள் என ராஜசேகரிடம் தெரிவித்தேன். அப்போது ராஜசேகர் வெளியில் சென்ற 2, 3 நிமிடங்களில் நாதீஷ்ா என்னை தொலைபேசில் அழைத்து எனக்கு வாரா வாரம் ரூ-8 லட்சம் டிரான்ஸ்போர்ட் கான்ட்ராக்டிற்கு வழங்குவார்கள் அதன்படி எனக்கு கொடுங்கள் என கேட்டார். அதற்கு நான் ராஜசேகர் என்னிடம் தாங்கள் மின் அஞ்சல் அனுப்புவதாக தெரிவித்ததாகவும், எனவே அவ்வாறு அனுப்பினால் தக்க ஆவண செய்வதாக தெரிவித்தேன். அதற்கு நதீஷ்ர் தான் படிப்பறிவில்லாதவர் என்றும், தனக்கு மின் அஞ்சல் அனுப்ப தெரியாது என்றும், வழக்கமாக தன் சார்பாக அமர்நாத் தான் மின் அஞ்சல் அனுப்புவார் என்றும், தன்னுடைய எஸ்.பி.ஐ பாங்காருபேட் வங்கி கணக்கில் தொகை செலுத்தப்பட்டால் செலுத்தப்பட்ட பிறகு அதை அமர்நாத்திடம் செலுத்திவிடுவேன் என்றும், உண்மையான டிரான்ஸ்போர்ட் பில்லுக்கு உரிய தொகையை மட்டும் அவரிடம் இருந்து பெற்றுக்கொள்வதாகவும், தன்னுடைய டிரான்ஸ்போர்ட் லட்டா பேடை அமர்நாத்தே வைத்திருப்பதாகவும், தெரிவித்தார். நதீஷ்ாவின் உதவியாளர் கரமத்துல்லா மூலம் போலியான பில்களை அமர்நாத் தயார் செய்ததாக நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். இது குறித்து

உடனடியாக என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தேன். என்னுடைய உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் நதீஷாவை விசாரணைக்காக எங்கள் சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் பிறகு எதிரி தலைமறைவாகிவிட்டார். பின்னர் தலைமை நிறுவனத்தின் அறுவுறுத்தலின் பேரில் மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தோம். 01.06.2012 முதல் 25.05.2016 வரையில் 5 கோடியே 19 லட்சம் ரூபாய் சொச்சமும் டிரான்ஸ்போர்ட் முன்தொகையாக நதீஷாவுக்கு செலுத்தி உள்ளோம். ஆனால் நதீஷாவிற்கு அமர்நாத் 4கோடியே 51லட்சம் மட்டும் செலுத்தியுள்ளார். 64லட்சம் சொச்சம் ரூபாய் எதிரி கையாடல் செய்துள்ளார். எட்டு லட்சம் ரூபாயை மின் அஞ்சல் அனுப்பி என் மூலமாக பெற்றுள்ளார். அதற்கு உரிய பில்களை அமர்நாத் சமர்ப்பிக்கவில்லை. அதேபோல் ரூபாய் 1,64,000/-க்கும் உரிய பில்களை சமர்ப்பிக்கவில்லை. எதிரி மொத்தமாக ரூ-64,15,000/- நிதி இழப்பு செய்துள்ளார். நதீஷா அமர்நாத்திற்கு அளித்த பில்களையும் அமர்நாத் கம்பெனிக்கு அளித்த பில்களையும் சரிபார்த்ததில் எதிரி கையால் செய்திருந்தது கம்பெனி தணிக்கையாளர்கள் மூலம் தணிக்கை செய்ததில் தெரிய வந்தது. நதீஷா மற்றும் கரமத்துல்லாவை டிரான்ஸ்போர்ட் ஒப்பந்ததாரராக அமர்நாத் தான் நியமனம் செய்தார். இதுசம்பந்தமாக நான் தான் மாவட்ட கண்காணிப்பாளிடம் புகார் அளித்தேன். அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னையும், நதீஷா மற்றும் கரமத்துல்லாவையும் அன்றைய தினம் போலிசார் விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை-</u>

அமர்நாத் எங்களது கம்பெனியில் 2009ல் இருந்து 2011ம் ஆண்டு வரையிலும் மீண்டும் 2012ல் இருந்து இந்த வழக்கு சம்பவம் வரையில் பணிபுரிந்தார். எதிரி பணிவிலகல் (Resignation) கடிதம் அளித்து 2 மாதம் கழித்து தான் நான் பணியேற்பு செய்து கொண்டேன் என்றால் எதிரி பணி விலகல் கடிதம் அளித்திருந்ததாக நிர்வாகம் என்னிடம் தெரிவிக்கவில்லை. எனக்கு தெரிந்த வரையில் அவ்வாறு அவர் கடிதம் அளிக்கவில்லை. சம்பவம் நடந்த பிறகும் நதீஷா தொடர்ந்து டிரான்ஸ்போர்ட் கான்ராக்டராக இருந்து வந்தாரா என்றால் 3, 6 மாதங்கள் மட்டும் இருந்தார். ஆவணங்களை பார்த்தால் தான் சரியாக சொல்ல முடியும். அதன் பிறகு இல்லை. அதன்பிறகு கம்பெனி போக்குவரத்து கான்ட்ராக்ட் குறித்து ஒருவருக்கே அளிப்பதில்லை என்றும், பகிர்ந்து அளிப்பது என விதிமுறைகளை உருவாக்கினார்கள். எதிரி கையாண்ட முறையை நான் எவ்வளவு காலம் கையாண்டேன் என்றால் கோப்புகளை பார்த்து

தான் சொல்ல முடியும். நான் பில்களை அப்ரூவல் செய்வது மட்டும் தான். அதன் பிறகு Actual fright க்கு உரிய தொகைகளை அக்கவுன்டென்ட் டிபார்ட்மென்ட் தான் சரிசெய்து கொள்ளும். எதிரி கையாண்ட முறையை நான் தொடர்ந்து 9 மாத காலம் வாரம் ஒன்றுக்கு ரூபாய் எட்டு லட்சம் வீதம் நதீஷ்ாவிற்கு வாடகை தொகையை அளித்தேனா என்றால் 6 மாதத்திற்கு மேல் இருக்கும் சரியாக தற்போதுஞாபகமில்லை. கோப்புகளை பார்த்து தான் சொல்லமுடியும். எதிரி பணிபுரிந்தபோது என்ன வகையான ரூல்ஸ் அன்ட் ரெகுலேசன்ஸ் பின்பற்றினார் என எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி என்ன நடைமுறைகளை கையாண்டாரோ அதே நடைமுறையை தான் நானும் புகார்அளிப்பதற்கு முன்பு வரை கடைபிடித்தேனா என்றால் பிரச்சனை குறித்து நான் நிர்வாகத்திற்கு தெரிவித்தவுடன் அவர்கள் சொன்ன நடைமுறையை தான் நான் கையாண்டேன். எனக்கு நிர்வாகம் தெரிவித்த நடைமுறையை போலத்தான் எதிரிக்கும் அளித்திருந்த நடைமுறையை எதிரி பின்னபற்றினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒவ்வொரு பில்லுக்கும் நிர்வாகம் அப்ரூவல் கொடுத்த பிறகு தான் பில் பாஸ் ஆகும் என்றால் இல்லை, ஒரு முறை அப்ரூவல் கொடுத்துவிட்டால் அதை பின்பற்றி நாங்கள் பில்லை பாஸ் செய்வோம். நதீஷ்ாவை நான் நாமக்கல் கிளையில் வைத்து விசாரித்தேன். நான் சில ஆவணங்களை நதீஷ்ாவிடம் வாங்கினேன். தற்போது அவைகள் என்ன என்று எனக்கு தெரியாது. அதேபோல் தலைமை நீர்வாகத்திடம் என்ன ஆவணங்களை நதீஷ்ா கொடுத்திருந்தார் என எனக்கு தெரியாது என்றால் பார்த்தேன் தற்போது ஞாபகமில்லை. புகாரை தலைமைக் கழகம் தான் தயார் செய்து கொடுத்தது என்றால் நான் தான் தயார் செய்து கொடுத்தேன். எத்தனை கையொப்பங்கள் என்னிடம் விசாரணை அதிகாரி வாங்கினார் என்றால் ஒரு கையொப்பம் தான் செய்தேன். 2009 – 2011 வரை வேலை செய்து விட்டு முதலாளியிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் வேலையை ராஜினமா செய்து வேறு கம்பெனிக்கு சென்று விட்டார் என்றால் அது பற்றி தெரியாது, வேலை பார்த்தது மட்டும் தெரியும். எங்களுடைய கம்பெனியுடைய எச் ஆர் எதிரியை மீண்டும்

வேலைக்கு செல்லுமாறு முதலாளி கேட்கிறார் நீங்கள் வேலை செய்யும் கம்பெனியில் கொடுக்கும் சம்பளத்தை விட அதிகம் கொடுக்கிறார் என்று கூறி 2012 –2014 வரை வேலை செய்தார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய கம்பெனியில் எனக்கு என்னென்ன வேலை என்பது குறித்து ஜாப் டிஸ்கிரிப்சன் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் அனைவருக்குமே என்னென்ன வேலை என்று அறிக்கை உள்ளது என்றால் சரிதான். எதிரிக்கு கொடுத்த ஜாப் டிஸ்கிரிப்சன் படி தான் வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி வேலை செய்த காலத்தில் எவ்வளவு தீவன பொருட்கள் தயாரிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எங்களுடைய நிறுவனத்திலிருந்து அனுப்பும் பால் கலப்படமாக உள்ளது என்று தமிழக அரசு பால் சோதனை எடுத்து பால் விற்பனையை தடை செய்தார்கள் என்றும் இது சம்பந்தமாக எங்களுடைய நிர்வாகம் சென்னை உயர் நீதிமன்றத்திற்கு சென்றார்களா என்றால் அது பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. எங்களுடைய நாங்கள் தயாரித்து அனுப்பும் மாட்டு தீவனங்களுக்கு நாங்கள் எந்தவிதமான அரசுஅனுமதியோ பெறவேண்டியதில்லை. தடை செய்யப்பட்ட ஆக்சிகுரோசின் என்ற உறார்மோனை தீவனத்தில் கலக்குமாறு அதனால் பால் உற்பத்தி அதிகமாகும் என்றும் எதிரியை வற்புறுத்தியதனால் எதிரி அதற்கு உடன்படாததால் அவருடைய கம்பெனியுனுடைய முதலாளியான சத்யனுக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டதனால் ராஜினமா கடிதம் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வேலைக்கு சேர்ந்த பின்பு எங்களது கம்பெனியில் நான் ஏற்கனவே வெளி நாடுகளில் வேலை செய்த அனுபவத்தில் தீவனத்தில் யூரியா என்ற ரசாயனத்தை கலந்து கொண்டிருந்தார்கள் அதை நான் வந்தபின்பு தான் நிறுத்தினார்கள் என்றால் சரிதான். யூரியா மாட்டு தீவனத்தில் கலப்பது சட்டவிரோதமானது அல்ல. எதிரி சட்டவிரோதமான பொருளுக்கும் மனித உடலுக்கு கேடுவிளைவிக்கும் என்ற காரணத்தினால் தடை செய்யப்பட்ட பொருட்களை தீவனத்தில் கலப்பதற்கு எதிரி ஒத்துக்கொள்ளாததாலும், கருத்துவேறுபாடு ஏற்பட்டு அதனால் எதிரி ராஜினாமா கடிதம் 3.5.2014ம்

தேதியன்று கொடுத்தார் அதிலிருந்து எதிரி எந்தவிதமான கம்பெனி நடவடிக்கைகளிலும் பங்கேற்கவில்லை என்றும், உங்களை தேர்வு செய்த பின்பு தயாரிக்கப்பட்ட ஆவணங்களை வைத்து பொய்யான சாட்சிகளையும், கம்பெனியில் வேலை செய்தவர்களை வைத்து எதிரியின் கவுரத்தை கெடுக்கும் அவர் வேறு கம்பெனிக்கு வேலை செல்வதை தடுப்பதற்காக தான் இந்த பொய் வழக்கு போட்டுள்ளார்கள் என்றும், இந்த புகாரை நான் தயாரிக்கவில்லை என்றும் இந்த வழக்கு சம்பந்தமான எந்தவிதமான நடவடிக்கைகள் தெரியாது என்றும் நான் நிர்வாகத்திற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.